**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம்– 2018ம் ஆண்டு மே மாதம் 24ம் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 1</u>**

அரசு ஆணை எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.12.01.99 Article 276 clause (2)constitution of India மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக சுற்றறிக்கை எண்.12503/18/ஆர்1, நாள்.21.05.2018ன்படியும் நகராட்சிகள் சட்டம் பிரிவு 124டி(2)ன் கீழ் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி விகிதத்தை உயர்வு செய்ய அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கடையநல்லூர் நகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள தொழில்வரியினை 01.10.2018 முதல் சீராய்வு செய்யவும் மேற்படி சீராய்வின் தற்போதுள்ள தொழில் வரியில் 25 விழுக்காட்டிற்கு குறையாமலும் 35 விழுக்காட்டிற்கு மிகாமல் நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டவாறு நடைமுறையில் உள்ள தொழில்வரியில் 35 விழுக்காட்டிற்கு மிகாமல் நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்ப.டுள்ளது. அதன் கீழ்க்கண்டவாறு நடைமுறையில் உள்ள தொழில்வரியில் 35 விழுக்காடு நிர்ணயம் செய்ய மன்ற இசைவு வழங்கலாம்.

மேலும் விபரத்தினை நாளேட்டில் விளம்பரம் செய்ய உள்ள செலவினத்திற்கும் மன்ற இசைவு வழங்கலாம்.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் | தற்போது வசூலிக்கப்படும் வரி | 01.10.2018 முதல் அமுல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்வரி |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | 21001 முதல் 30000 வரை | ரூ.120/– | ரூ.165/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | ரூ.300/– | ரூ.405/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | ரூ.590/– | ரூ.800/– |
| 5 | 60001 முதல் 75000 வரை | ரூ.890/– | ரூ.1200/– |
| 6 | 75001 ம் அதற்கு கூடுதல் | ரூ.1180/– | ரூ.1600 வரையறை ரூ.1250/– |

**(ந.க.எண். 2055/2018/அ2)**

**<u>தீர்மானம் எண். 124</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 2</u>**

இந்நகராட்சி பொறியாளர் அறைக்கு புதிதாக 1.5டன் குளிர்சாதன இயந்திரம் (A/C) ரூ.48500/– மதிப்பீட்டில் விநியோகம் செய்து நிறுவுதல் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 107, நாள் 02.04.2018 அன்று அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்க்கொள்ள தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் 04.04.2018 அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் ( புதிய A/C விநியோகம் செய்து நிறுவுதல் பணிக்கு) |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>(பவர்ஏஜெண்ட்),<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.48200 /– |
| 2 | திரு. P.M. அசன் முகம்மது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.49400/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக் (பவர்ஏஜெண்ட்), என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி பொறியாளர் அறைக்கு புதிதாக 1.5டன் குளிர்சாதன இயந்திரம் (A/C) விநியோகம் செய்து நிறுவுதல் பணிகளை மேற்கொள்ள அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனிஅலுவலர் 04.04.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் இந்நகராட்சி பொறியாளர் அறைக்கு புதிதாக 1.5டன் குளிர்சாதன இயந்திரம் (A/C) விநியோகம் செய்து நிறுவுதல் பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4723/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 125</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 3</u>**

கடையநல்லூர் நகராட்சி கிருஷ்ணாபுரம் கிராமம் சர்வே எண்.333/1பி, 1சி, 1டி, 1இ, 1எப் ஆகிய பாகங்களில் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ம.வ.மு/ம(திலி) எண்.125/2018 நாள்.03.04.2018ன்படி கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் கூராய்வு கட்டணம் வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணங்கள் முதலியன செலுத்தப்பட்டமைக்கு மேற்படி சர்வே எண் கொண்ட மனை எண்கள். 14, 15, 16, 17 (தெற்கு பகுதி) மனை அனுமதி வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2683/2018/எப்1)**

**<u>தீர்மானம் எண். 126</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 4</u>**

இந்நகராட்சிப் பகுதியில் குடிநீர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கு பொருட்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை கீழ்கண்ட விபரப்படி உயர்வு செய்யவும் அதற்கான விளம்பர மற்றும் அரசு தமிழ் பிரசுரம் செய்வதற்கான செலவினங்களுக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | உபயோகம் | தற்போது நடைமுறையில் உள்ள முன் வைப்புத் தொகை ரூ | உயர்வு செய்யப்பட வேண்டிய முன் வைப்புத் தொகை ரூ. | தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ. | உயர்வு செய்யப்பட வேண்டிய குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | குடியிருப்பு | 6000/– | 7500/– | 55/– | 105/– |
| 2 | வணிக மற்றும் தொழிற்சாலை | 10000/– | 15000/– | 105/– | 300/– |

**(ந.க.எண். 1463 /2005/இ2)**

**<u>தீர்மானம் எண். 127</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 5</u>**

இந்நகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் நடைபெற்று வந்த காரணத்தினால், பயனாளிகளுக்கு புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவது 2011 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் இதுநாள் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளதால், புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவ2, நாள்.21.09.2009ல் தெரிவித்துள்ளவாறு (நிர்ணயிக்கப்பட்ட தூரத்திற்கு சாலை பராமரிப்பு சாலை மற்றும் மேற்பார்வை கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யலாம் அங்கீகாரத்திற்காக.

| 2018–2019 ஆண்டிற்கான சாலை பராமரிப்பு மற்றும் மேற்பார்வை கட்டணம் விபரம் | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | சாலையின் வகை | சாலையின் நீளம் | சாலை பராமரிப்பு கட்டணம் ரூ. | மேற்பார்வை கட்டணம் ரூ. |
| 1 | மண் மற்றும் மெட்டல் ரோடு | 0–30 மீட்டர் வரை | 3000 | 1707 |
| 2 | மண் மற்றும் மெட்டல் ரோடு | 31–90 மீட்டர் வரை | 3000 | 3757 |
| 3. | தார் சாலை | 0–30 மீட்டர் வரை | 3491 | 2007 |
| 4. | தார்சாலை | 31–90 மீட்டர் வரை | 4423 | 4057 |
| 5. | சிமெண்ட சாலை | 0–30 மீட்டர் வரை | 4034 | 2094 |
| 6. | சிமெண்ட் சாலை | 31–90 மீட்டர் வரை | 4962 | 4132 |

**(ந.க.எண். 1758 /2018/இ2)**

**<u>தீர்மானம் எண். 128</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 6</u>**

கடையநல்லூர் நகராட்சி கிருஷ்ணாபுரம் கிராமம் சர்வே எண்.333/1பி, 1சி, 1டி, 1இ, 1எப்–ல் அமைந்துள்ள **7950.00** ச.மீ **(1.96)** ஏக்கர் பரப்பளவு கொண்ட **4** மனைகளுக்கு மனை வரன்முறை அனுமதி வழங்கிட அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலா் அவர்கள் **09.05.2018** அன்று முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் இசைவு வழங்கலாம்.

**(ந.க.எண். 1405/2018/எப்1)**

**<u>தீர்மானம் எண். 129</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 7</u>**

இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயக்கும் TN76AC1093 புதிய ஈப்பு வாகத்திற்கு ரூ.**55000/–** உத்தேச மதிப்பீட்டில் புதிதாக குளிர்சாதன இயந்திரம் விநியோகம் செய்து நிறுவுதல் பணிக்கு இந்நகராட்சி தனி அலுவலர் **09.05.2018** அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதிப் பெற்ற நிறுவனங்களிடம் **09.05.2018** அன்று நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விலை விகிதம் (A/C விநியோகம் செய்து நிறுத்தல் பணிக்கு) |
|---|---|---|
| 1 | Cool care,<br>1/2 Daks Building,<br>Near Saravana selvarathnam,<br>South by Pass Road,<br>Tirunelveli. | ரூ.51500/– |
| 2 | Arul cool spares<br>18A/33, Hong kong plaza.<br>Palayam Kottai road.<br>Tuticorin ?628 303 | ரூ.53000/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்.ள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள Cool care Tirunelveli என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு TN76AC1093 புதிய ஈப்பு வாகனத்திற்கு புதிதாக குளிர்சாதான இயந்திரம் (A/C) விநியோகம் செய்து நிறுவுதல் பணிக்கு நடவடிக்கைகள் மேற்க்கொள்ள அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1741 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 130</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 8</u>**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ8/2704/2017 நாள்.29.10.2017ம் தேதிய நிர்வாக அனுமதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் கீழ்காணும் பணியினை மேற்க்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி முத்துக்கிருஷ்ணாபுரம் வானுவர் பிள்ளையார் கோவில் தெரு, 7 வது வார்டில் ஒரு போர்வெல் சிறுமின் விசை தொட்டி அமைத்தல் பணிக்கு | ரூ.2.00 /– |

மேற்காணும் பகுதியில் பணிகளை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கிய நிலையில் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் ஆட்சேபணை தொடர்ந்து தெரிவித்து வந்ததால் அப்பணிகள் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மேற்காணும் பணிக்கு மற்றாக கீழ்காணும் விபரப்படி உள்ள பணிக்கு திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகாம் அவர்களின் செயல்முறை ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி முத்துக்கிருஷ்ணாபுரம் 7 வது வார்டு தெற்கு விளைத் தெரு போர் செவல் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் பணிக்கு | ரூ.2.00 /– |

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களுக்கு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதை கருத்திற் கொண்டு அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 21.05.2018 அன்று முன் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3327 /2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 131</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 9</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.51/செமதொ/செ/இநிஉ/2018. நாள்.12.02.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் “தமிழக அரசின் ஓராண்டு நிறைவு சிறப்பு மலரில் ’’ வெளியிட உள்ளதால் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் பொருட்டு, இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை மாலைமுரசு ஓராண்டு நிறைவு சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் மாலைமுரசு சிறப்பு மலரில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி மாலைமுரசு சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய 25.04.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் சிறப்பு மலரில்

விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1326/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 132</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 10</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.83/செமதொ/செ/2018. நாள்.12.03.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் "தமிழக அரசின் ஓராண்டு நிறைவு சிறப்பு மலரில் " வெளியிட உள்ளதால் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் பொருட்டு, இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை தினதந்தி ஓராண்டு நிறைவு சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் தினதந்தி சிறப்பு மலரில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி தினதந்தி சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய 25.04.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1269/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 133</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 11</u>**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.88/செமதொ/செ/2018. நாள்.20.03.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி "தமிழக அரசின் ஓராண்டு சாதனை மலரில் " வெளியிட உள்ளதால் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் பொருட்டு, இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை தினசூரியன் ஓராண்டு சாதனை மலரில் விளம்பரம் செய்ய தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் தினசூரியன் ஓராண்டு சாதனை மலரில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி தினசூரியன் ஓராண்டு சாதனை மலரில் விளம்பரம் செய்ய 07.05.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1736/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 134</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 12</u>**

இந்நகராட்சி பராமரிப்பில் நகராட்சி வளாகத்தின் வடபுறம் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு ஜீன்–2017 முதல் ஏப்ரல் – 2018வரை தேவையான அனைத்து பொருட்கள் வாங்கிய வகைக்கும், ஊதியம் வழங்கிய வகைக்கும் மேற்கொண்ட செலவினங்கள் கீழ்க்கண்ட விபரப்படி பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும்.

| மாதம் | எரிவாயு | பால் | மளிகை | காய்கனி | ஊதியம் | அரிசி மற்றும் வாகன வாடகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜீன் –2017 | 29304 | 5250 | 58744 | 30640 | 78000 | 2458 | 175092 |
| ஜீலை –2017 | 26381 | 5425 | 59701 | 39985 | 75750 | 0 | 180861 |
| ஆகஸ்ட்–2017 | 26304 | 5425 | 52146 | 34803 | 75000 | 2458 | 169832 |
| செப்டம்பர் – 2017 | 29076 | 5250 | 64775 | 28304 | 77750 | 2459 | 178538 |
| அக்டோபர் –2017 | 25910 | 5250 | 63877 | 29078 | 76000 | 2459 | 176664 |
| நவம்பார்–2017 | 34620 | 5250 | 61931 | 31035 | 69750 | 0 | 167966 |
| டிசம்பர்–2017 | 34788 | 5425 | 57784 | 28516 | 75500 | 2458 | 169683 |
| சனவரி –2018 | 34632 | 5250 | 59415 | 28318 | 70000 | 0 | 162983 |
| பிப்ரவரி –2018 | 34584 | 4900 | 58050 | 23920 | 69750 | 5016 | 161636 |
| மார்ச்– 2018 | 32640 | 5425 | 67123 | 28739 | 83000 | 2559 | 186846 |
| ஏப்ரல் –2018 | 31656 | 5250 | 56398 | 26180 | 78250 | 2559 | 168637 |
| மொத்தம் | 339895 | 58100 | 659944 | 329518 | 828750 | 22426 | 1898738 |

**(ந.க.எண் .2360 /2015/சிஅ2)**

**தீர்மானம் எண். 135**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 13**

இந்நகராட்சி பகுதியில் தொழில்வரி செலுத்துவது சம்மந்தமாக திரு.நடராஜன் என்பவரால் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதி மன்ற தென்காசியில் தொடரப்பட்ட வழக்கு எண்.IA.No.**330/2017**, O.S.No.100/2018க்கு நகராட்சியின் சார்பில் ஆஜார் ஆன வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.3500/– திரு .எஸ். ஜோன்ஸ், நகராட்சி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணமாக வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் திரு.S.ஜோன்ஸ் வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.3000/– வழங்கப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1540/2018/அ2)**

**தீர்மானம் எண். 136**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்–14**

கடையநல்லூர் நகராட்சிக்கு புதிதாக வரி விதிப்பு கோரும் விண்ணப்பங்களை மையப்படுத்தப்பட்ட இணையதள சேவை முறையில் (CWBS) CFC மூலம் பெறும் வகைக்கு 2018–2019 –I முதலாம் அரையாண்டு (01.04.018) முதல் ரூ.200/– நிர்ணயம் செய்து வசூல் செய்ய சிறப்பு அலுவலரின் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் புதிதாக வரி விதிப்பு கோரும் விண்ணப்பங்களை மையப்படுத்தப்பட்ட இணையதள சேவை முறையில் (CWBS) CFC மூலம் 01.04.018) முதல் ரூ.200/– நிர்ணயம் செய்து வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1708 /2018/அ1)**

**தீர்மானம் எண். 137**

அங்கீகரிக்கப்படுகிறது.

பொருள் எண்– 15

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.55 நாள்.12.02.2018ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 19.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2017–18 | | | | |
| 1. | இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள இரண்டாத்து முக்கு (Infiltration Well) மற்றும் அதன் அருகிலுள்ள திறந்தவெளி கிணற்றிக்கு வரும் உந்து குழாயில் மண் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்யும் பணி | இந்நகர்மன்ற தீர்மான எண்.55 நாள்.12.02.2018 | 1.15/– | திரு.K.S.அப்துல் மாலிக்<br>திரு.P.M.அசன் முகம்மது | 0.01% குறைவு<br>1.66% அதிகம் |
| 2. | இந்நகராட்சி இடைநிலை நீருந்து நிலைய குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து தேசிய நெடுஞ்சாலைகளில் குடிநீர் விநியோகத்திற்காக பதிக்கப்பட்ட 18” C.I. குடிநீர் பகிர்மான குழாயிலுருந்து தெருக்களுக்கு செல்லும் 17 இடங்களில் இணைக்கப் பட்டுள்ள பகிர்மான குழாய்களில் 1மீ அளவு துண்டிப்பு செய்து அடைக்கும் பணி. | இந்நகர்மன்ற தீர்மான எண்.41 நாள்.12.02.2018 | 1.10/– | திரு.K.S.அப்துல் மாலிக்<br>திரு.P.M.அசன் முகம்மது | 0.01% குறைவு<br>0.20% அதிகம் |
| 3. | இந்நகராட்சி இடைநிலை நீருந்து நிலையத்தில் உள்ள குடிநீர் நீர்த்தேக்கத்தொட்டி 450MM பகிர்மான குழாய் மற்றும் ரகுமானியபுரம் 1–9 தெருவிற்கு செல்லும் 150MM குழாயில் வால்வு பொருத்தி வால்வு தொட்டி அமைக்கும் பணி. | இந்நகர்மன்ற தீர்மான எண்.55 நாள்.12.02.2018 | 2.75/– | திரு.K.S.அப்துல் மாலிக்<br>திரு.P.M. அசன் முகம்மது | 0.01% குறைவு<br>0.78% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு சதவீதத்திலும் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்திலும் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 19.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

ந.க.எண்.1055/2018/இ1

<u>தீர்மானம் எண். 138</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்–16</u>

இந்நகராட்சிப் பகுதியில் தெருவிளக்குகள் பயன்பாட்டிற்கு **LED** மின்விளக்குகள் ரூ.950000/– மதிப்பீட்டில் விநியோகம் செய்து நிறுவுதல் பணிக்கு இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.49 நாள்– 12.02.2018அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 24.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | டெபாசிட் செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு. செந்தூர் லைட்ஸ், 238/374, கே.சி ரோடு, செங்கோட்டை. | 0.15% குறைவு | ரூ.9900/–க்கான செ.எண்:141/001/2/18–19/0000947 நாள்.24.04.2018ன் படி செலுத்தியுள்ளார். |
| 2 | திரு. அஸ்வின் எலக்ரிக்கல்ஸ் & ஹார்டுவேர்ஸ், 2–1–5/1, மெயின் ரோடு, கட்டளைகுடியிருப்பு, செங்கோட்டை. | 0.15% அதிகம் | ரூ.9900/–க்கான SBI KDNR வ.வ.எண்: 644003. நாள்.24.04.2018ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.15% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. செந்தூர் லைட்ஸ்,238/374, கே.சி ரோடு, செங்கோட்டை என்ற நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு தனிஅலுவலர் அவர்கள் 24.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் தெருவிளக்குகள் பயன்பாட்டிற்கு தேவையான **LED** மின்விளக்குகள் விநியோகம் செய்து நிறுவுதல் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண். /2018/இ1

<u>தீர்மானம் எண். 139</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 17</u>

இந்நகராட்சி தந்தை பெரியார் வாரச்சந்தையிலுள்ள கடை எண்.41 மற்றும் 44க்கு திரு.சுந்தராஜ் 13A/16 வ.உ.சி தெரு, மாவடிக்கால், கடையநல்லூர் என்பவருக்கு 01.04.2016 முதல் 31.03.2018 வரை உரிமம் வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி கடைகளின் உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால் அன்னார் கடை எண். 41 மற்றும் 44 ஐ நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் அன்னார் இக்கடைக்காக இவ்வலுவலக செல்லாண் எண்.1503730 நாள்.01.10.2015ல் ரூ.20000/–ம் மற்றும் செல்லாண் எண்.1503731 நாள். 01.10.2015ல் ரூ.20000/– ஆக மொத்தம் ரூ.40000/–ஐ திரும்ப வழங்கவும் கேட்டுள்ளார். எனவே மேற்கண்ட கடைகளை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021 வரை மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும், திரு.சுந்தரராஜ் என்பவர் இக்கடைக்காக செலுத்தியுள்ள ஏல மன் வைப்புத்தொகையினை திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் இக்கடைகளுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண் .1399/2013/அ3)**

**<u>தீர்மானம் எண். 140</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–18</u>**

இந்நகராட்சி வாரச் சந்தையிலுள்ள கடை எண்.41ன் உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால் மேற்படி கடைக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர தனி அலுவலர் அவர்கள் 25.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி கடை 41க்கு 11.05.2018 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | பெயர் மற்றும் முகவரி | டெபாசிட் விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி.T. அலிபாத்திமா<br>263B B/94, ரகுமானியாபுரம் 11ம் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.25000/–<br><u>DD No.052530</u><br>07.05.2018<br>IOB கடையநல்லூர். | ரூ.950/– |
| 2 | திருமதி.R. ரசூல் பிவி,<br>W/o, ரஹ்மத்துல்லா,<br>263-15-89, ரகுமானியாபுரம் 5ம் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.25000/–<br><u>DD No.751657</u><br>07.05.2018<br>CUB-கடையநல்லூர். | ரூ.1000/– |

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் (2)ல் குறிப்பிட்டுள்ள திருமதி.ரசூல் பீவி என்பவரின் மாத வாடகை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளது. மேலும் இக்கடைக்கு ஏற்கனவே ரூ.740/– மாதவாடகையாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது இக்கடைக்காக பெறப்பட்ட திருமதி.ரசூல் பீவி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை தொகை கூடுதலாக உள்ளதால் அன்னரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அன்னாருக்கு 01.06.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்க அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. மேற்படி கடைக்கு ஏல கோரயாரும் முன்வரவில்லை என்ற விபரம் தகவலுக்கு

**(ந.க.எண்.1399/2017/அ3)**

**தீர்மானம் எண். 141**

01.06.2018 முதல் 31.03.2019 வரை ஓராண்டுக்கு மட்டும் உரிமம் வழங்க அனுமதிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 19</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை 01.05.2017 முதல் 30.04.2018 வரை மேற்க் கொள்ள தனியார் நிறுவனமான M/S ஆகாஷ் இன்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு செயல்முறை ஆணை உத்திரவு வழங்கப்பட்டு தெரு விளக்கு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் கடித ந.க.எண்.13899/2016/DO1, நாள்.02.03.2017ம் தேதிய கடிதத்தில் தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் நிறுவனம் மூலம் ஒராண்டிற்கு மேற்கொண்டு மீண்டும் உரிய அனுமதிப் பெற்று மேற்காணும் தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்பயைில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்குகள் இயக்குநர் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் நிறுவனமான ஆகாஷ் இஞ்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடேட், சென்னை நிறுவனம் மூலம் கடந்த 01.05.2017 முதல் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு 30.04.2018ம் தேதியுடன் ஒராண்டு காலம் முடிவடைகிறது. இந்நிலையில் மீண்டும் 01.05.2018 முதல் 30.04.2019ம் வரை ஓராண்டு காலத்திற்கு 2017–2018ம் ஆண்டு விலை விகிதத்தில் 10% விலை உயர்வு செய்து தனியார் நிறுவனமான M/S ஆகாஷ் இன்சினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனம்

மூலம் தொடர்ந்து மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் கால நீட்டிப்பு உத்திரவு பெற வேண்டி கடிதம் அனுப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காணும் தெருவிளக்கு பராமரிப்பு 01.05.2018 பணிக்கான கால நீட்டிப்பு அனுமதி ஆணை 30.04.2018 வரை வரப்பெறவில்லை. ஆகவே 01.05.2018 முதல் 31.05.2018 வரைஏற்கனவே மேற்கொண்ட விலை விகிதத்தில் மேற்க்கொள்ள மேற்காணும் தனியார் நிறுவனம் மூலம் சம்மத கடிதம் வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி தனி அலுவலர் 30.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 01.05.2018 முதல் 31.05.2018 வரை உள்ள காலத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5130 /2016/இ1)**

**<u>தீர்மானம் எண். 142</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 20</u>**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் TN76A2283 ஈப்பு வாகனத்தின் டயர்கள் 08.07.2015 அன்று 2,37,273 கிலோ மீட்டர் ஒடிய நிலையில் புதிய MRF டயர்கள் வாங்கி பொருத்தப்பட்டுள்ளது. தற்போது 3,27465 கிலோ மீட்டரில் 90192 கிலோ மீட்டர் ஒடிய நிலையில் இயங்கி வருகிறது. இந்நிலையில் மேற்காணும் வாகனத்தின் 5 எண்ணம் டயர்களும் மிகவும் தேய்மானம் அடைந்து அடிக்கர் பஞ்சர் ஆகும் நிலை ஏற்படுகிறது. இதனால் குடிநீர் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு மேற்காணும் வாகனத்தின் டயர் எண்.215/75/R15 கொண்ட MRF டயர்கள் 5 எண்ணம் புதிதாக வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.36000/–க்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1408 /2016/இ1)**

**<u>தீர்மானம் எண். 143</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 21</u>**

இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு பணியான கொசுப்புகை மருந்து அடிக்கும் பணிகள் இரண்டு ஆட்டோக்கள் மூலம் உத்தேச செலவுத்தொகை ரூ.25,000/–மதிப்பீட்டில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் 29.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், பொதுசுகாதார அவசர, அவசியம் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு அத்தியாவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள 30.01.2018 அன்று உள்ளுர் ஆட்டோ உரிமையாளர்களிடம் நேரடியாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விலை விகிதம் (ஒருமணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1 | திரு.கே.செல்லச்சாமி,<br>த/பெ.காளி<br>38பி.காளியம்மன் கோவில் தெற்குத் தெரு,<br>முத்துகிருஷ்ணாபுரம்.<br>கடையநல்லூர் (TN76Q5338) | ரூ.190/– |
| 2 | திரு. எஸ்.மாரி<br>த/பெ. சுப்பையா,<br>பிள்ளையார் கோவில் தெற்குத் தெரு,<br>கிருஷ்ணாபுரம்,<br>கடையநல்லூர் (TN76K3191) | ரூ.230/– |

1. வரப்பெற்ற மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.190/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட திரு.கே. செல்லச்சாமி, 38பி.காளியம்மன் கோவில் தெற்குத் தெரு, முத்துகிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகன அங்கீரத்திற்காக.
2. மேலும் பொது சுகாதார அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 30.01.2018 அன்று முன் அனுமதி வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண் 230/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 144</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 22</u>**

இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு தடுப்பு பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூன்று எண்ணம் டிராக்டர்கள் மூலம் உத்தேச செலவுத் தொகை ரூ.75000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் 29.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், பொது சுகாதார அவசர, அவசியம் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு அத்தியாவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள 30.01.2018 அன்று உள்ளூர் டிராக்டர் உரிமையாளர்களிடம் நேரடியாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விலை விகிதம் (ஒருமணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1 | கே.நிதர்ஷனா எர்த் மூவர்ஸ் டிராக்டர், கோபாலகிருஷ்ணன் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.1800/– |
| 2 | வி.எஸ்.எஸ்.சத்யா எர்த் மூவர்ஸ் டிராக்டர், பெருமாள் கோவில் தெரு, போகநல்லூர், கடையநல்லூர். | ரூ.2300/– |

1. வரப்பெற்ற மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1800/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட கே.நிதர்ஷனா எர்த் மூவர்ஸ் டிராக்டர், கோபால கிருஷ்ணன் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம், கடையநல்லூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகனத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவதற்கு அங்கீரத்திற்காக.
2. மேலும் பொது சுகாதார அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 30.01.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி வாகனத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண் 396/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 145</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 23</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் ரூ.3,00,000/– (மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் வாங்குவதற்கு தனி அலுவலர் அவர்கள் 02.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 09.05.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ எண் | பாதுகாப்பு உபகரணங்கள் | M.காஜா மைதின் 1/2, தெற்கு மேல கோயித்கால் தெரு, தென்காசி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒன்றுக்கு ரூ. | தி வாலஜா பேட்டை அக்ரோ இன்ஜினியரிங் அண்ட் சர்வீஸ் கூட்டுறவு சென்டர் லிமிடெட், வாலஜாபேட்டை நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | முக கவசம் | 150 | 180 |
| 2 | ஹெல்மெட் | 550 | 600 |
| 3 | கையுறை | 350 | 400 |
| 4 | கம்பூட் | 1450 | 1600 |
| 5 | சாக்கட் | 650 | 750 |

1. மேற்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 5 வரையுள்ள பாதுகாப்பு உபகரணங்களுக்கு குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. **M.காஜா மைதின் 1/2, தெற்கு மேல கோயித்கால் தெரு, தென்காசி** என்பவரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை ஒப்புக்கொண்டு விநியோக உத்தரவு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.
2. பொது சுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் 02.04.2018 அன்று முன் அனுமதி பெற்று பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக

**(ந.க.எண் 750/2018/எச்1)**

<u>**தீர்மானம் எண். 146**</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>**பொருள் எண்– 24**</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் மற்றும் டிரைலர் எண். TN72 U2038& 5204 வாகனத்திற்கு ரூ.55000/– (ஐம்பத்து ஐந்து ஆயிரம் மட்டும்) உத்தேச மதிப்பீட்டில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு ரேப்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்கள் 02.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 09.05.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ எண் | ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளிகள் விலை விகிதம் |
|---|---|---|
| 1 | மூஸா இஞ்னியரிங் ஒர்க்ஸ்.<br>194, செங்கோட்டை ரோடு,<br>தென்காசி– 627 811. | ரூ.39,800/– |
| 2 | ஸ்ரீ ஜெயராம் மோட்டார் ஒர்க்ஸ்,<br>55ஏ தென்காசி ரோடு,<br>அம்பாசமுத்திரம் – 627 401 | ரூ.54,100/– |

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் ரூ.39,800/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இஞ்னியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி–627 811. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீரத்திற்காக.
2. பொது சுகாதார அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி அவர்களிடம் 02.04.2018 அன்று முன் அனுமதி பெற்று டிராக்டர் மற்றும் டிரைலர் எண். TN72 U2038& 5204 ரூ.55,000/–உத்தேச மதிப்பீட்டில் தகுதிச்சான்று புதுப்பிக்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண் .1084/2018/எச்1)**

<u>**தீர்மானம் எண். 147**</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 25**

இந்நகராட்சிப் பகுதியில் இயங்கி வந்த ஐ அக்குவா குடிநீர் சுத்திகரிப்பு ஆலையினை வறட்சி காரணமாக பூட்டி சீல் வைக்ககபபட்டதை எதிர்த்து மேற்படி ஆலையின் உரிமையாளர் திருமதி. செல்வி பாண்டியன் என்வரால் சென்னை, உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்கள்.WP(MD)No,21936/2016, 4820 மற்றும் 16233/2017க்கு நகராட்சியின் சார்பில் ஆஜார் ஆன வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/–ம் Blue Line குடிநீர் சுத்திகரிப்பு ஆலையினை பூட்டி சீல் வைக்கப்பட்டது சம்பந்தமாக ஜான் சுதீஷ் குமார் என்பவரால் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குஎண். (MD)2276/2017க்கு நகராட்சியின் சார்பில் ஆஜார் ஆன வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/–ம் மற்றும் வழக்கு WP(MD)No.4956/2018க்கு சம்பந்தமாக நகராட்சியின் சார்பாக ஆஜாரான வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/–ம் ஆக மொத்தம் ரூ.50,000/–ஐ திரு.ப.சீனிவாசன், வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணமாக வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1023/2018/எச்1)**

**தீர்மானம் எண். 148**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 26**

இந்நகராட்சி ஆணையர், உள் அலுவலர் மற்றும் வெளி அலுவலர்கள் 01.04.2018 முதல் 31.03.2019 அலுவலக பணி நிமித்தமாக வெளியூர் சென்று வந்தமைக்கு சமர்ப்பிக்கப்படும் பட்டியலில் கண்ட பயணப்படிகள் வழங்க மன்ற இசைவுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3571/2015/எச்1)**

**தீர்மானம் எண். 149**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 27**

கடையநல்லூர் நகராட்சி – வறட்சி நிவாரண திட்டம் 2018–2019ன் கீழ் ரூ.25,00,000/–இலட்சம் மதிப்பீட்டில் பெரியாற்றுப்படுகையில் புதிய திறந்த வெளி கிணறு மின் மோட்டார் மற்றும் குழாய் பதித்தல் பணிக்கு இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.96 நாள்–02.04.2018அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 09.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | டெபாஸிட் செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு. M. மாடசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.004% குறைவு | ரூ.25000/–க்கான SBI KDNR வ.வ.எண்: 644052. நாள்.09.05.2018ன் படி சமர்பித்துள்ளார். |
| 2 | திருமதி. M. மகேஸ்வரி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.41% அதிகம் | ரூ.25000/–க்கான SBI KDNR வ.வ.எண்: 644053. நாள்.09.05.2018ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.004% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. M. மாடசாமி, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ள படியும், குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்கள் 09.05.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி பெரியாற்றுப்படுகையில் புதிய திறந்த வெளி கிணறு மின் மோட்டார் மற்றும் குழாய் பதித்தல் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1219/2018/இ1)**

**தீர்மானம் எண். 150**

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 28</u>

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்தும் தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. இந்நிலையில் மேற்காணும் பணிகளால் சேதமடைந்த சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் விட்டு இணைப்புகளை மாற்றியமைத்தால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் சேதமுள்ள, கணக்கீட்டு கீழ்காணும் விபரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.22 கண்ணார் தெரு (மேற்கு பகுதி) மற்றும் கடகாலீஸ்வரர் கோவில் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.80/– |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு மேற்கு பகுதி (ஐந்தாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.60/– |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு மேற்கு பகுதி (ஆறாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.60/– |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு மேற்கு பகுதி (ஏழாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.60/– |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.26 காமாட்சியம்மன் கோவில் தெரு மற்றும் மலம்பாட்டை ரோடு குறுக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.75/– |
| 6. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 26 கட்டிவிநாயகர் கோவில் தென்வடல் தெரு (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.50/– |
| 7. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 24 கட்டிவிநாயகர் கோவில் தென்வடல் தெரு (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.50/– |
| 8. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 24 கட்டிவிநாயகர் கோவில் தென்வடல் தெரு (மூன்றாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.50/– |
| 9. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 24 கட்டிவிநாயகர் கோவில் தென்வடல் தெரு (நான்காம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | 9.50/– |
| 10. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 33 கிருஷ்ணாபுரம் மருகால் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 8.15/– |
| 11. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 8 பெரிய தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 9.80/– |
| 12. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 01 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் வடக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 9.80/– |
| 13. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 01 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் தென்வடல் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 9.80/– |

| | | |
|---|---|---|
| 14. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 01 குமந்தாபுரம் தேசிய நெடுஞ்சாலை 208 கீழ்புறமுள்ள வடக்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 9.80/– |
| 15. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 32 ஜானகியம்மாள் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 9.80/– |
| 16. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். வார்டு எண். 32 ரகுமானியாபுரம் 4வது தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு | 9.80/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 16 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளில் மிகவும் சேதமுற்று குண்டு குழியுமாக உள்ளது. எனவே அச்சாலைகளை பொதுமக்கள் பயன்படுத்தும் போது மிகவும் சிரமமாக உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற் கொண்டு வரிசை எண்.1 முதல் 16 வரை உள்ள பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டு உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 354/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 151</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 29</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் டிப்பர் லாரி எண். TN76 AF 5635 வாகனம் தற்போது 5,000 கிலோ மீட்டல் ஒட்டியுள்ளதால் மேற்படி வாகனத்திற்கு இஞ்சின் ஆயில், ஆயில் பில்டர் புதிதாக மாற்றுதல், கியர் பாக்ஸ் ஆயில், கிரவுன் ஆயில், டிப்பிங் ஆயில் மற்றும் கூலண்ட் ஆயில் மாற்றும் பணிகளை மூஸா இஞ்னியரிங் ஒர்க்ஸ், தென்காசி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1550/–க்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பொதுசுகாதார அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களிடம் 09.04.2018 அன்று முன் அனுமதி பெற்று மேற்படி வாகனத்தின் இஞ்சின் ஆயில், ஆயில் பில்டர் புதிதாக மாற்றுதல், கியர் பாக்ஸ் ஆயில், கிரவுன் ஆயில், டிப்பிங் ஆயில் மற்றும் கூலண்ட் ஆயில் மாற்றும் பணிகளை மேற்கொண்டதற்கும் பட்டியல் தொகை வழங்கியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1277/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 152</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 30</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட அவர்களின் அறிவுரையில், நகராட்சிப்பகுதிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளை அந்தந்த வார்டு பகுதிகளிலேயே சிறிய அளவில் கலவை உரக்கிடங்கு அமைத்து மக்கும் குப்பைகளை உரமாக மாற்றுவதற்கும் மக்காத மறு சுழற்சி பொருள்களை தனித்தனியே பிரித்து எடுப்பதற்கும் **ON SITE Micro compost Centre** அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படை யில் இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் 4 இடங்களில் **ON SITE Micro compost Centre (MCC)** அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.29 மதினாநகர் கானாங் குளத்து அருகே பயனற்ற கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு | ரூ.9.00/– |

| | | |
|---|---|---|
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.20 அட்டக்குளம் அருகே பயனற்ற இரண்டு கழிப்பறைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு | ரூ.9.00/– |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 1 குமந்தாபுரம் நடுத்தெருவில் உள்ள பயனற்ற கழிப்பறையை இடத்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு. | ரூ.9.00/– |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை ரோடு, கிருஷ்ணாபுரம். மேற்கு பகுதியில் உள்ள இடுகாடு அருகேயுள்ள இடத்தில் புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு. | ரூ.8.50/– |

மேற்காணும் பணிக்களுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்கள் 27.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1327/2018/இ1)**

**தீர்மானம் எண். 153**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 31**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ8/6850/2016, நாள்.11.05.2018ம் தேதிய ஆணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2016–2017ன் கீழ் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.எம் முகம்மது அபூபக்கர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்காணும் பணியினை மேற்க்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் விபரம் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி இரசாலியாபுரம் தெரு 12 வது வார்டு அல்லி மூப்பன் தெரு 13 வது வார்டு பெண்கள் பள்ளி எதிர்புறம் பேவர்பிளாக் இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு. | ரூ.3.00 |

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உள்ள பணியாக உள்ளதாலும், மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களுக்கு பணியின் முன்னேற்ற அறிக்கை சமர்பிக்க வேண்டியுள்ளதை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் 15.05.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.117/2018/இ1)**

**தீர்மானம் எண். 154**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 32**

இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் பொது சுகாதார பிரிவிற்கு கீழ்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 35 எண்ணம் குப்பை வாங்கும் தள்ளுவண்டிகள் பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு | ரூ.3.50/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பச்சை நிற டம்பர் பின்கள் 40 எண்ணத்தை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு | ரூ. 3.50/– |

(ந.க.எண். 1175/2018/இ1)

<u>தீர்மானம் எண். 155</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

தனி அலுவலர்,
கடையநல்லூர் நகராட்சி.